**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி.**

**M.C.O.P.No.106/2024**

22025ஆம் வருடம் நவம்பர் மாதம் 10ஆம் நாள் என்பவரின் சாட்சிய வாக்குமூலம் 1873 ஆம் வருடத்தின் 10–வது விதிமுறைகளின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திரு .N.இளவேந்தன் (எ.ம.சா.2) | தொழில் | : நிர்வாக அதிகாரி, நேஷனல் இன்சூரன்ஸ் கம்பெனி லிட். மதுரை மாநகர். |
| த/பெ. | : திரு. நடராஜன் | வயது | : 38 |
| க/பெ. | : திரு. | | |
| கிராமம் | : அண்ணா நகர் | இனம் | : ஆண் |
| தாலுகா | : மதுரை மாநகர் | நாள் | : 10.11.2025 |
| மாவட்டம் | : மதுரை | | |

<u>முதல் விசாரணை :–</u>

இம்மனுவில் மனுவில் 2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் நிர்வாக அதிகாரியாக பணிபுரிந்து வருகிறேன். என்னுடைய சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். இதில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையவை தான். என்னுடைய தகவலின் அடிப்படையில் தான் அது தயார் செய்யப்பட்டது.

எ.ம.சா.ஆ.4 – 12.07.2022 முதல் 11.07.2027 வரையான காலத்திற்கான TN 94 C 2039 வாகனத்திற்கு காப்பீடு ஒப்பந்தம் – உண்மை நகல்.

எ.ம.சா.ஆ.5 – 21.03.2025 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு தபால் ரசீதுடன் – அலுவலக நகல்.

எ.ம.சா.ஆ.6 – 1ம் எதிர்மனுதாரர் மற்றும் ஓட்டுனர் ஜெயபால் (எ) ஜெயராமனுக்கு சார்பு செய்யப்பட்ட ஒப்புகை அட்டை (எண்ணிக்கை – 2)

மனுவை தள்ளுபடி செய்யக் கேட்டுக்கொள்கிறேன்.

<u>**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :-**</u>

**1. TN 94 C 2039 என்ற பதிவு எண் கொண்ட வாகனம் விபத்து தேதியில் எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டு அமலில் இருந்தது என்றால் சரிதான். அந்த பாலிசியில் 3ம் நபருக்கு இழப்பீடு வழங்குவதற்கான பிரிமியம் வசூல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். இந்த விபத்தைப் பொறுத்தவரை மனுதாரர் 3ம் நபர் என்றால் சரிதான். 3ம் நபரான மனுதாரரை எங்கள் காப்பீட்டு ஒப்பந்தம் எந்த விதத்திலும் கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.**

**2. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் எ.ம.சா.1 தனது சாட்சியத்தில் ஓட்டுனரான ஜெயபால் என்ற ஜெயராமனுக்கு வேறு முகவரியில் ஓட்டுனர் உரிமம் உள்ளதா என்பது தனக்கு தெரியாது என சாட்சியமளித்துள்ள நிலையில், அவருக்கு ஓட்டுனர் உரிமம் இல்லை என நான் எதிர்வாதம் செய்துள்ளது தவறு என்றால் சரியல்ல. விபத்துக்கு 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுனர் காரணம் என்பதாலும், அவர் மீது முதல் தகவல் அறிக்கை மற்றும் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளதாலும், விபத்து சமயம் மேற்படி வாகனம் எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டு அமலில் இருந்து வருவதாகவும், மனுதாரருக்கு எங்கள் காப்பீட்டு நிறுவனம் இழப்பீடு செலுத்தக் கடமைப்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரியல்ல.**

<u>**மறு விசாரணை**</u> **இல்லை.**

Taken down by me in open court and
read over to the witness in Tamil and
acknowledged by him/her to be correct.

K BHARATHI
Digitally signed by K BHARATHI
Date: 2025.11.10 20:25:51 +0530

Additional Sub Judge,
Palani.